1979 நவம்பர் 8]

THIRU R. MARGABANDHU: That is why, may I know whether the Government has decided to keep the appointment of Public Prosecutors and Assistant Public Prosecutors in abeyanc to till the pronouncements from the High Court.

THE HON. THIRU K. NARAYANASWAMY: We will be lating the law of the land, that is sub-section (6) of Section 24.

சோத்துப் பாறை அணைத் திட்டம்.

குறுகிய கால வினா எண். 7 திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியகுளம் பகுதியில் நீண்ட நெடுங்காலமாக ஆய்வு செய்யப்பட்டு செயல்படுத்தாமல் இருக்கும் சோத்துப் பாறை அணைத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அணைக்கட்டு கட்டும் திட்டத்தை தீவிரப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ): இத் திட்ட அறிக்கை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) இடமிருந்து அரசுக்குக் கிடைத்துள்ளது. இத்திட்டம், பொருளாதார ரீதியில் மிகவும் பயனில்லாதது எனக் கருதப்படுகிறது. அரசு ஆய்வு செய்து முடிவு எடுக்கும்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, இந்தப் பெரியகுளம் பகுதியில் உள்ள சோத்துப்பாறை அணைக்கட்டுத் திட்டம் பெனிபிட் காஸ்ட் ரேஷியோவில் பலன் இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆய்வுகள் நெல் பயிரை மட்டும் வைத்து ஆய்வு நடத்தியதால் பெனிபிட் காஸ்ட் ரேஷியோ கட்டுப்படியாகவில்லை என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அணைக்கட்டுப் பகுதியில் இருக்கும் நிலங்களில் கமர்ஷியல் கிராப்ஸ், கரும்பு, பருத்தி போன்றவைகளை எல்லாம் போடுகிறார்கள் அவைகளை அடிப்படையாக வைத்து பெனிபிட் காஸ்ட் ரேஷியோ பார்க்க ஆய்வு நடத்தப்படுமா?

[முற்பகல் 9·10]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, 'பெனிபிட்—காஸ்ட் ரேஷியோ'வைப் பொறுத்த அளவிலே முதலிலே இருந்த அந்த 'நார்ம்ஸ்' எல்லாம் விலக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போன்று விளையக் கூடிய நெல்லை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பணப் பயிர்களான கரும்பு, பருத்தி ஆகிய பயிர்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு தான் அந்தக் கணக்கைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். மதுரை மாவட்டத்திலே 1 ரூபாய் செலவழித்தால்

[1979 நவம்பர் 8

$1\frac{1}{2}$ ரூபாய் கிடைக்கிற அளவிலே 1:1.5 என்ற விகிதத்திலே இருந்தால்தான் திட்டங்கள் அமல்படுத்த முடியும் என்று அரசு விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின் அடிப்படையில் ஒவ்வொரு திட்டமும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதாக இருக்கிறது. குறிப்பாக இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையிலும் 1:0·36 என்ற அளவிலே நிலமை இருக்கிறது. ஆகவே இவைகளையெல்லாம் கணக்கிலே வைத்துத்தான் திட்டங்களை அமல்படுத்துவதா வேண்டாமா என்பதை முடிவு செய்ய வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வினா எண். 141—

சென்னை நகரில் முதியோர் ஒய்வூதியம் பெறுவோர்

திரு. சு. பாலன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) 1975—ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சென்னை மாநகரில் எத்தனைபேருக்கு முதியோர் ஒய்வு ஊதியம் வழங்கப்பட்டது?

(ஆ) 1978—ம் ஆண்டு சனவரி மாதம் சென்னை மாநகரில் எத்தனை பேருக்கு முதியோர் ஒய்வு ஊதியம் வழங் கப்பட்டது?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

	முதியோர் ஓய்வூதியம் (இயல்பானது)	விதவை ஓய்வூதியம்	உடல் ஊன முற்றோர் ஓய்வூதியம்.
(1) 1975 டிசம்பரில் முதியோா ஓய் வூதியம் வழங்கப் பெற்றவர்களின் எண்ணிக்கை.	1,902	1,023	10
(2) 1978 ஜனவரி யில் முதியோர் ஓய்வூதியம் வழங் கப்பெற்றவர்களின் எண்ணிக்கை.	2,597	1,052	116

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு அப்போதைய சர்க்கார் இருந்த நேரத்திலே 1,902 முதியோர்களுக்கு உதவித் தொகை வழங்கப் பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் 1978 ஆம் ஆண்டு 2,597 பேர்களுக்குத்தான் தரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கிறபோது ஏறத்தாழ 600 பேர்களுக்குத்தான் அதிகமாகக் கொடுக் கப்பட்டிருக்கிறது. ஏன் அதிகமாகக் கொடுக்கப்படவில்லை? மனுக்கள் வரவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.